பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 10 புதன்கிழமை 27.10.2021 கதிர் 356

### இனிது ரகசியம் அல்ல!

நேற்றிரவு மன்னாரில் இருந்து ஒரு நண்பர் தொலைபேசி அழைப்பை எடுத்தார்.

''நாளை (இன்று) என்ன செய்தி?" – என்று 'கஷுவலாக'க் கேட்டார். ஒன்றுமில்லை என்றேன் நான்.

"இல்லை, இல்லை... ☞2

## சஜித் அணிக்குள்ளும் மோதல் இரு எம்.பிக்கள் கடும் அதிருப்தி

### தொகுதி அமைப்பாளர் பதவிகளையும் தூக்கி வீசினர் 'பட்ஜட்'டின்போது அரசுடன் இணைவர் என எதிர்பார்ப்பு



பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர், தொகுதி அமைப்பாளர் பதவியை இராஜிநாமா செய்துள்ளனர்.

பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே ஆகிய இருவருமே கட்சியில் வகிக்கும் பதவிகள் மற்றும் தொகுதி அமைப்பாளர் பதவிகளில் இருந்து இவ்வாறு விலகியுள்ளனர். ☞2

## கவிழப்போகும் அரசுடன் நான் இணையமாட்டேன்

### சஜித் அணி எம்.பி. ஹேஷா திட்டவட்டம்

இந்த அரசின் கதை முடியப் போகின்றது. அரசை விரட்டியடிப்பதற்கு மக்கள் தயாராகிவிட்டனர். எனவே, இப்படியானதொரு அரசியல் நான் இணையமாட்டேன்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே அறிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவியை நான் இராஜிநாமா செய்தது உண்மையே. இது தொடர்பில் செயலாளருக்குத் தெரியப்படுத்தியிருந்தேன். பிரச்சினைகள் தொடர்பில் கட்சிக்குள் பேச்சு நடத்தி ☞2

## பிரான்ஸ் தூதருடன் சம்பந்தன் குழுவினர் நேற்றுப் பேச்சு

கொழும்பு, ஒக் 27

இரா.சம்பந்தன் எம்.பி. தலைமையிலான கூட்டமைப்பு எம்.பிக்கள் குழு நேற்றுக் காலை பிரான்ஸ் தூதுவர் எரிக் லவர்ட்டுவை சந்தித்து சுமார் ஒன்றரை மணி நேரம் உரையாடியது. ☞10

# அரசுக்கு எதிராக பேராயர் அதிரடி

## பேச்சு நடத்த கிறிஸ்தவ எம்.பிக்களுக்கு அழைப்பு



கொழும்பு, ஒக்டோபர் 27

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அரசு மீது கடும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வரும் கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, அரசுக்கு எதிரான நடவடிக்கையில் நேரடியாகக் களமிறங்கியுள்ளார். ☞2

## மரணம் 14 தொற்று 554

இலங்கையில் மேலும் 14 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார். ☞2

## கொரோனாவால் உப தவிசாளர் காலமானார்!



(ந.லோகதயாளன்)

கொரோனாத் தொற்றுக்குள்ளான வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் உப தவிசாளர் வெள்ளைச்சாமி மகேந்திரன் மரணமடைந்துள்ளார்.

வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை ☞2

## அரசை வீட்டுக்கு அனுப்பாவிடின் பேரழிவைச் சந்திக்கும் இலங்கை

### பிரதான எதிர்க்கட்சி எச்சரிக்கை



இந்த அரசை உடனடியாக வீட்டுக்கு அனுப்ப வேண்டும். இல்லையேல் நாட்டுக்குத்தான் பேரழிவு என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த அரசு தோல்வியடைந்ததை அரசில் அங்கம் ☞10

## கப்ராலுக்கு அமைச்சரவை அந்தஸ்த்து



இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை, ☞2

## சுமந்திரனுக்கு எதிராக குருநகரில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்; செருப்பு மாலை அணிவிக்கப்பட்டு கொடும்பாவியும் எரிப்பு



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனுக்கு எதிராக குருநகரில் நேற்று மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உள்ளூர் இழுவை மடி மீன்பிடித் தொழில்முறை தடை செய்யப்பட வேண்டும் என்று சுமந்திரன் எம்.பி. அண்மையில் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் ☞2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
உங்கள் ஆப்த அண்ணன் நாளை (இன்று) எண்பதாவது அகவையில் கால் வைக்கின்றார். அவருக்கு ஒரு வாழ்த்து கிடையாதா?" – என்றார் என் மன்னார் அண்ட் கம்பனி நண்பர்.

அந்த அரசியல் அண்ணனுக்கு 'பார்ப்போம் தம்பி! பேசுவோம் தம்பி! செய்வோம் தம்பி...!' – என்று அடைமொழிப் பட்டத்தைப் பெற்றுக் கொடுத்தவரே என் மன்னார் நண்பர்தான்.

''நிச்சயம் வாழ்த்து சொல்வோம் தம்பி...! கட்டாயம் சொல்வோம் தம்பி... ! ஒன்று சேர்ந்து சொல்வோம் தம்பி...!" – என்று நான் பதிலளித்தேன். (அந்த அரசியல் அண்ணனின் பெயர் வந்ததும் என் பேச்சும் அந்தப் பாணியில் போய் விட்டது பார்த்தீர்களா...?)

"உங்கள் வாழ்த்து உயர்வு நவிழ்ச்சியாக இருக்குமா அல்லது வஞ்சப் புகழ்ச்சியாக அமையுமா?" – என்று கேட்டார் அந்த நண்பர். நான் பதில் கூறாமல் சிரித்து வைத்தேன். இனி விடயத்துக்கு வருவோம்.

ஆம். தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா இன்று எண்பதாவது அகவையில் அடி எடுத்து வைக்கின்றார். 1942 ஒக்ரோபர் 27இல் பிறந்த அவருக்கு இன்று 79 வயது முடிகின்றது.

அரசியலில் நாடாளுமன்றத் தேர்தலைப் பொறுத்தவரை 1989இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் அவர் முதலில் களமிறங்கினார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் கூட்டு முன்னணியில் போட்டியிட்ட அவர் ஆக 2 ஆயிரத்து 820 வாக்குகளைப் பெற்று 16 வேட்பாளர் கொண்ட பட்டியலில் 13ஆவது இடத்துக்கு வந்து தோற்றார். எனினும் அத் தேர்தலின் மூலம் தேசியப் பட்டியலில் தெரிவு செய்யப்பட்ட அமிர்தலிங்கம் ஐந்து மாத காலத்தில் சுட்டுக் கொல்லப்பட அந்த இடத்துக்கு எம்.பியானார் மாவை சேனாதிராசா.

அடுத்த தேர்தலிலும் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோற்ற மாவை சேனாதிராசா, 1999 ஜூலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் நீலன் திருச் செல்வம் கொல்லப்பட அந்த இடத்துக்கு எம்.பியானார்.

அதற்குப் பின்னர் மாவையின் பாடு ஏறுமுகம்தான். முதல் இரண்டு தடவைகளும் தேர்தலில் தோற்று, தேசியப் பட்டியல் மூலம் எம்.பி.யான மாவை அதற்குப் பின்னர் வந்த ஐந்து தேர்தல்களிலும் வென்று மொத்தம் ஏழு தடவைகள் எம்.பியாகப் பதவி வகித்திருக்கின்றார்.

2000 தேர்தல் (10,965 வாக்குகள்), 2001 தேர்தல் (33,831 வாக்குகள்), 2004 தேர்தல் (38,783 வாக்குகள்), 2010 தேர்தல் (20,501 வாக்குகள்), 2015 தேர்தல் (58,782 வாக்குகள்) ஆகியவற்றில் வென்றார்.

எனினும் ஏழு தடவைகள் தொடர்ந்து எம்.பியான அவர் கடைசியாக 2020 இல் நடந்த தேர்தலில் பத்துப்பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலில் ஆறாவது இடத்தைப் பெற்று எம்.பியாகத் தேர்வாகும் வாய்ப்பை இழந்தார்.

அது மாத்திரமல்லாமல், முதல் இரண்டு முறையும் பொதுத் தேர்தலில் தோற்றும் தேசியப் பட்டியல் மூலம் எம்.பியான அவர் – கடைசியாக எட்டாவது தேர்தலில் தோற்ற போதும், அப்படி தேசியப் பட்டியல் மூலம் எம்.பியாக முயன்றாராயினும், கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன், பேச்சாளர் சுமந்திரன், இலங்கைத் தமிழரசின் பொதுச் செயலாளராக அப்போதிருந்த துரைராஜசிங்கம் ஆகியோர் கூட்டாகத் காய் நகர்த்தி அதற்கு ஆப்படித்து விட்டனர்.

எனினும், முதல் இரண்டு தடவைகளும் ஆரம்பத்தில் தேசியப்பட்டியல் எம்.பிக்களாக வேறு நபர்களே (ஒரு தடவை அமிர்தலிங்கம், அடுத்த தடவை நீலன் திருச்செல்வம்) நியமிக்கப்பட்டனர். அதன் பின்னரே அந்தப் பதவியை மாவை சுவீகரித்துக் கொண்டார். இம்முறையும் அப்படி நடக்குமோ என்னவோ...?

இன்று அவருக்கு பிறந்த தினம். அகவை எண்பதில் அவர் காலடி எடுத்து வைக்கின்றார். அவர் நீடூழி வாழவும் அவர் தலைமையில் தமிழரசுக் கட்சி செழிக்கவும் வாழ்த்துகிறேன்.

எனினும், வாழ்த்துக்கு மத்தியிலும் ஓர் உண்மையை 'என் அட்வைஸாக' அவருக்கு முன் வைக்கிறேன். எடுத்துக் கொள்வதும், புறம் தள்ளுவதும் அவரைப் பொறுத்தது. அவர் பெரியவர். நான் சிறியவன். என் கருத்தைப் புறம் தள்ளி நடப்பது his wisdom.

"Show your magnanimity!" – இது தான் என் வாழ்த்து அட்வைஸ்.

இதுதான் அவர் தனது பெருந்தன்மையை, மகத்துவத்தை வெளிப்படுத்திக் காட்ட வேண்டிய மிக உயரிய வேளை. உரிய சந்தர்ப்பம். இந்த magnanimity என்ற சொல்லுக்கு அதிக அர்த்தம் உண்டு. (Magnanimity is the virtue of being great of mind and heart - அதாவது மகத்துவம் என்பது மனதாலும் இதயத்தாலும் விசாலமாக இருப்பது)

பதவி ஆசை பிடித்தவராக அவரைக் காட்ட முனையும் தரப்புகளுக்கு அதையும் தாண்டியவராகத் தன்னை நிரூபித்து, வெளிப்படுத்தி, தன் மகத்துவத்தை, மேன்மையான பண்பியல்பை பகிரங்கமாக்க இது ஓர் அரிய சந்தர்ப்பம். பயன்படுத்துங்கள் என்று தம்பியாக அவருக்கு ஆலோசனை முன்வைக்கிறேன்.

– மின்னல் –

## அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இதன் முதல் கட்டமாக அனைத்து கிறிஸ்தவ நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்திப்பதற்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

பேராயரின் இந்த அழைப்பு கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொழும்பு பேராயர் இல்லத்தில் மேற்படி சந்திப்பு நடைபெறவுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் மற்றும் நாட்டின் தற்போதைய சூழ்நிலைகள் குறித்து இதன்போது பேச்சு நடத்தப்படவுள்ளது என எதிர்பார்க்கப்படுகின்றது.

## சஜித் அணிக்குள்ளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இது தொடர்பில் கட்சி செயலாளருக்குத் தெளிவுபடுத்தி அவர்கள் இருவரும் கடிதமும் அனுப்பிவைத்துள்ளனர்.

வரவு – செலவுத் திட்ட கூட்டத் தொடரின் போது இவ்விருவரும் அரசுடன் இணைவார்கள் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

## சுமந்திரனுக்கு எதிராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குருநகர் பகுதியில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு ஹர்த்தால் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. அத்துடன் அங்கு குருநகர், வல்வெட்டித்துறை மீனவர்கள் ஒன்றிணைந்து எதிர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

அங்கு கூடியிருந்தவர்களால் சுமந்திரன் எம்.பிக்கு எதிராகக் கோஷங்கள் எழுப்பப்பட்டதுடன் பதாகைகளும் காட்சிப் படுத்தப்பட்டன.

இறுதியாக சுமந்திரன் எம்.பியின் கொடும்பாவிக்கு செருப்பு மாலை அணிவிக்கப்பட்டு அது தீக்கிரையாக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கருத்துத் தெரிவிக்கும்போது, இது தமிழ்க் கட்சிகளுக்கு எதிராகவோ அல்லது அரசுக்கு எதிரான போராட்டமோ அல்ல. இது தமிழினத் துரோகி சுமந்திரனுக்கு எதிரான போராட்டம். பல பேருக்கு வாழ்வளிக்கும் இழுவை மடித் தொழிலை குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக முழுமையாகத் தடை செய்ய வேண்டும் எனக் கோருவது நியாயமற்றது – என்றனர்.

## கொரோனாவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பெற்று வந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி நேற்று அவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா, கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த இவர் கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தமையுடன், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் வன்னி தேர்தல் தொகுதியில் போட்டியிட்டும் இருந்தார்.

## கப்ராலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இலங்கை அரசின் உயர் பதவி படிநிலைகளில் 5ஆவது இடத்தில் பேண அரசு தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், பிரதம நீதியரசருக்கு அடுத்தபடியாக 5ஆவது நிலையில் தரப்படுத்தப்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சரவை அமைச்சர், பீல்ட் மார்ஷல் ஆகியோருக்கு அடுத்தபடியாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவி தரப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் பதவியானது, 20ஆவது உயர் பதவியாகத் தரப்படுத்தப்பட்டிருந்தது.

அரச உயர் பதவி படிநிலையானது, சுதந்திர தினம் உள்ளிட்ட தேசிய நிகழ்வுகளில் உரிய அந்தஸ்தை வழங்கும் வகையில் கடைப்பிடிக்கப்படுகின்றது. ஆயினும், ஜனாதிபதியின் விருப்பத்துக்கமைய, இத்தர நிலைகளில் இல்லாத அலுவலருக்கோ அல்லது நபருக்கோ உரிய அந்தஸ்தை வழங்க முடியும்.

அந்தவகையில், மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், அரசின் உயர் பதவி முன்னுரிமையில் 5ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சரான அஜித் நிவாட் கப்ரால், எம்.பி. பதவியிலிருந்து விலகி, மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டபோது, குறித்த பதவி அமைச்சரவையின் அதிகாரங்களுக்கு நிகராக இருக்க வேண்டும் எனக் கோரினார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கவிழப்போகும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தீர்வைப் பெற முற்பட்டேன்.

எனினும், இந்த விடயத்தை ஊடகங்களில் அம்பலப்படுத்தியது யார்? ஐக்கிய மக்கள் சக்திக்குள் சூழ்ச்சிக்காரர்கள் உள்ளனர். அவர்களை சஜித் பிரேமதாஸ இனங்காண வேண்டும். அவ்வாறு இல்லா விட்டால் முன்னோக்கி பயணிக்கவிடமாட்டார்கள். அன்று ரணிலுடன் இருந்து 'டீல்' அரசியல் செய்தவர்கள் இன்று எமது அணியிலும் உள்ளனர்.

இந்த அரசின் கதை முடியப்போகின்றது. இது சிறு பிள்ளைகளுக்கும் தெரியும். நிலைமை அப்படி இருக்கையில் நான் எப்படி அரசியல் இணைவேன்? மக்களுக்கான எனது அரசியல் பயணம் தொடரும். மக்களுடனேயே எனக்கு 'அரசியல் உடன்படிக்கை' உள்ளது – என்றார்.

## மரணம் 14...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இவ்வாறு உயிரிழந்தவர்களில் 9 ஆண்களும், 5 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில், 30 வயதுக்குட்பட்டவர்களில் ஆண் ஒருவரும், 30 தொடக்கம் 59 வயதுக்கிடைப்பட்டவர்களில் ஓர் ஆணும், ஓர் பெண்ணுமாக 2 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 7 ஆண்களும் 4 பெண்களுமாக 11 பேரும் சாவடைந்துள்ளனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 654 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் நேற்று 554 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 37 ஆயிரத்து 201 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 300 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 4 ஆயிரத்து 3 ஆக உயர்வடைந்துள்ளது.

**வவுனியாவில் வீடு வாடகைக்கு!**
நெளுக்குளம் சந்திக்கு அருகாமையில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு
**071 4841069**



# எம்.பிக்களுக்கு வாகனங்கள் இறக்குமதி தீர்மானம் எதுவும் இதுவரை இல்லையாம்

## கூறுகின்றார் சாகர காரியவசம்

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பான தீர்மானங்கள் இதுவரை எடுக்கப்படவில்லை என ஆளும்கட்சி தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இது தொடர்பான கலந்துரையாடல்களை நடத்துவதற்கு இதுவே சரியான தருணம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிட்டார்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே சாகர காரியவசம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக வாகனங்களை இறக்குமதி செய்யும் நடவடிக்கை தாமதமானது என அவர் தெரிவித்தார்.

இந்த வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெறுவதாகத் தெரிவித்த




அவர், இருப்பினும் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை எனவும் உறுதிப்படுத்தினார்.

Jaffna College Institute of Technology
Calls for the following courses

Computer Certificate Courses ( 3 – 4 months Part time)

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

# சிங்கப்பூரில் இருந்து எரிபொருள் இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி

அடுத்த ஆண்டு தை மாதம் முதல் 8 மாத காலத்துக்கு எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான நீண்ட கால ஒப்பந்தம் சிங்கப்பூர் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

1,341,000 பீப்பாய்கள் பெற்றோல் (92 ஒக்) மற்றும் 459,000 பீப்பாய்கள் பெற்றோல் (95 ஒக்) இறக்குமதி செய்வதற்கான நீண்ட கால ஒப்பந்தத்திற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடம் ஏலம் கோரப்பட்டது.

அதன்படி, அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட விசேட தரக் கொள்வனவுக் குழுவின் சிபாரிசுக்கு அமைவாக குறித்த நிறுவனத்துக்கு உரிய ஒப்பந்தத்தை வழங்குவதற்கு எரிசக்தி அமைச்சரால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதேவேளை 1,137,500 பீப்பாய்கள் டீசல் (அதிகபட்ச சல்பர் சதவீதம் 0.05) மற்றும் 262,500 பீப்பாய்கள் டீசல் (அதிகபட்சம் 01 சதவீதம்) இறக்குமதி செய்வதற்கான நீண்ட கால ஒப்பந்தத்துக்கான ஏலமும் கோரப்பட்டது. இதற்கான ஒப்பந்தமும் சிங்கப்பூர் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.




அரச சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும் சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாகவும் இந்தியன் செலக்ஷனின் தீபாவளி மலிவு விற்பனை நடைபெறும் என்பதனை மகிழ்ச்சியோடு வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 19 முஸ்லிம் கல்லூரி வீதி ஆதன இல 36 என்ற இலக்கத்தைக்கொண்ட ஆதனம் K.M.M முகமட் சலிதான் என ஆதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை முகமட் மீரான் சாகிப் முகமட். தாயூப் நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு M.M.M நமீஸ் அவர்கள் முகதாவில் 2003.03.31ம் திகதி 219ம் இலக்கத்தில் நிறைவேறிய மூலம் குறித்த ஆதனம் தனக்குச் சொந்தமானது என பிரகடனப்படுத்தியுள்ளார்.

பின்னர் யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரி வீதி இலக்கம் 12பி தற்போது புத்தளம் இரத்மல்யாய கொழும்பு வீதியைச் சேர்ந்த முகமட் மீராசாகிப் முகமட் தாயூப் பிரசித்த நொத்தாரிசு எஸ்.சிவபாதம் முகதாவில் எழுதப்பட்ட 3736 இலக்க 26.03.2009ம் திகதி எழுதப்பட்ட அறுதி உறுதி மூலம் மௌதாஸ் சைலஸ்ரீ என்பவருக்கு அறுதியாக விற்பனை செய்துள்ளார்.

ஆதன விபரம்:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "பள்ளுவிலித்தோட்டம்" நிலபரப்பு ஒன்று குளி பதின்மூன்று தசம் இரண்டு மூன்று (நில.பர.01 குளி 13.23) வீடும் கிணறும் வான் பயிர் செய்பயிர்களும் இது 18.03.2003ல் நில அளவையாளர் கே.கனகசபை அளந்து வரைந்து தயாரித்த 1007/03ம் இலக்கப்படத்தில்
1ம் துண்டாக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்
வடக்கு :- கற்குளம் வீதியிலுள்ள வாய்க்கால்
கிழக்கு :- முருகேசு பெண் வரதநாயகிக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம்.
மேற்கு :- முஸ்லிம் கல்லூரி வீதியிலுள்ள வாய்க்கால்
தெற்கு :- மீரான் சாகிப் முகமட் தாகீரின் ஆதனம்.

தற்போது மௌதாஸ் சைலஸ்ரீ இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது மௌதாஸ் சைலஸ்ரீ என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**மாநகரசபை**

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## அரசுப் பங்காளிகளின் கூத்து!

ஆளும் பொதுஜன பெரமுன கூட்டுக்குள் – மொட்டுக் கூட்டமைப்புக்குள் – ஏற்பட்டிருக்கும் குழப்பம் அல்லது முரண்பாடு அரசியலில் ஒரு கோட்பாட்டு ரீதியான சர்ச்சையாக புதிய பரிமாணம் எடுத்திருக்கின்றது.

கெரவலப்பிட்டிய யுகதனவி மின் நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு மாற்றி, அரசுத் தலைமை மேற்கொண்ட முடிவுக்கு எதிராக அரசுக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் கிளர்ந்தெழுந்திருக்கின்றன என்பது தெரிந்த விடயம்தான்.

இந்தச் சிக்கல் குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் நேரில் பேசுவதற்கு அதிருப்தியாளர் குழு முயற்சித்தது. அது பலனளிக்கவில்லை.

நேரில் பேசுவதற்கான வாய்ப்பை அதிருப்தியாளர்கள் குழுவுக்கு வழங்க மறுத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இரண்டு விடயங்களைப் பதிலாகக் கொடுத்தார்.

ஒன்று – அந்தப் பங்கு மாற்ற விவகாரம் அரசின் தீர்மானம். அமைச்சரவை முடிவு. அரசுத் தீர்மானத்துக்கு அரசுப் பக்கத்தினர் கட்டுப்பட்டேயாக வேண்டும்.

அடுத்தது – அது குறித்து நான் பேசத் தயாரில்லை. வேண்டுமானால் அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் அது குறித்துப் பேசலாம்.

இந்தக் கருத்தை வலியுறுத்தும் விதத்தில் பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரு விடயத்தைச் சொன்னார்.

“அரசை விமர்சிக்கும் விடயங்களை அரசின் உள்கூட்டங்களில் பேசுங்கள். பொது வெளியில் பகிரங்கமாக அவை குறித்துப் பேசாதீர்கள்!” – என்றார் அவர்.

ஆனால், இந்த விடயத்தில் அழுங்குப் பிடியாக நிற்கும், அரசுக் கூட்டமைப்பின் பத்து பங்காளிக் கட்சிகளும், இது குறித்து இனியும் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேசுவதில் பயனில்லை, மக்களிடம் நேரடியாகப் பேசுவோம் என்று முடிவு கட்டியிருக்கின்றன.

பொதுக் கூட்டங்கள் வைத்து, மக்களைச் சந்தித்து, தங்கள் ஆட்சேபனையை – அரசின் தீர்மானத்தின் தவறை – விமர்சனமாக மக்கள் முன் வைக்க அவர்கள் தயாராகி வருகின்றார்கள்.

இங்குதான் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்புக் குறித்த கொள்கை முரண்பாடு – கருத்தியல் வேறுபாடு – பற்றிய சர்ச்சை எழுகின்றது.

பங்காளிக் கட்சிகள் அரசுக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றன. அவற்றின் தலைவர்கள் அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கின்றார்கள். மேற்படி பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு மாற்றும் முடிவு அமைச்சரவைத் தீர்மானமாக எடுக்கப்பட்ட தீர்வு என்கின் றது அரசுத் தலைமை.

அப்படி இருக்கையில், தொடர்ந்து அரசுக் கூட்டமைப்புக்குள் இருந்து, அமைச்சரவை அந்தஸ்து உள்ள அமைச்சுப் பதவிகளையும் வகித்துக் கொண்டு, அதே அரசின் செயற்பாடுகளுக்கு எதிராக மக்களிடம் செல்வது என்பது பெரும் கேலிக் கூத்தல்லவா? அந்தச் செயற்பாடு அரசியல் கோட்பாட்டியல் ரீதியாக குளறுபடியான – முரண்பாடான – செயற்பாடல்லவா? – என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன.

அரசுடன் கருத்து முரண்பாட்டால், அதை மக்களிடம் எடுத்துச் சொல்லும் தனித்துவமான உரிமை அரசமைப்பு ரீதியாகத் தங்களுக்கு இருப்பதாக, அதிருப்திக் குழுவின் மூத்த பிரதிநிதியான சிரேஷ்ட அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறுகின்றார்.

ஆனால் அரசுக்குள் தொடர்ந்து அங்கம் வகித்துக் கொண்டு, கூட்டுப் பொறுப்புக்கு கடப்பாடுடைய அமைச்சரவையிலும் தொடர்ந்து அமைச்சராகப் பதவி வகித்துக் கொண்டு, அந்தகைய அமைச்சரவையின் தீர்மானமாகக் காட்டப்படும் ஒரு முடிவுக்கு எதிராக பொதுமக்களிடம் நேரில் சொல்வதாகக் கூறுவது வெறும் கேலிக் கூத்து. அபத்த நடவடிக்கை.

அப்படிச் செய்வதானால் முதலில் அமைச்சரவையிலிருந்து வெளியே வரவேண்டும். பின்னர் ஆளும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி நிலைமையிலிருந்து வெளியேற வேண்டும்.

இரண்டையுமே செய்யாமல், இப்படி அரசியல் கோமாளித்தனம் காட்டுவது, ‘பதவியிலும் கண், வாய்ச் சவடால் கருத்திலும் விருப்பம்’ என்பதைத்தான் வெளிப்படுத்துகின்றது.

## மக்களை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டிய தருணத்தில் தூங்கிக்கொண்டு இருக்கின்றது அரசு!

### வடிவேல் சுரேஷ் காட்டம்



அரசாங்கம் தூங்கிக்கொண்டிருக்கின்றது. மக்களை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டிய தருணத்தில் நகைச்சுவை பேசிக் கொண்டிருக்கின்றது என்று இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

‘பெருந்தோட்டக் கம்பனிகளின் அடாவடியால் பாதிக்கப்பட்டுள்ள மலையக பெருந்தோட்ட மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் தொடர்ச்சியாக அதிகரிக்கப்படுவது பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. மக்கள் வறுமையின் பிடிக்குள் சிக்கி விடுவார்களோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

நிலைமை இவ்வாறிருக்கையில், அரசாங்கம் தூங்கிக்கொண்டிருக்கின்றது. மக்களை காக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய தருணத்தில் நகைச்சுவை பேசிக்கொண்டிருக்கின்றது. பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தால்கூட மாணவர்களின் தேவைகளை பூர்த்திசெய்யமுடியாத நிலையில் பெற்றோர் உள்ளனர்.

அதேவேளை, பெருந்தோட்டப்பகுதிகளிலுள்ள காணிகள் அபகரிக்கப்படுகின்றன. தொழிற்சங்கப் பிரச்சினைகள் பொலிஸ் நிலையம்வரை கொண்டுசெல்லப்படுகின்றன. எமது மக்கள் இவ்வாறு பாதிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. எமது பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. மலையக மக்களைப் புறக்கணிப்பதை கண்டிக்கின்றோம். ஏனைய மக்களுக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளும் எமது மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் நிவாரணம் மலையக மக்களுக்கு வழங்கப்படுவதில்லை. ஆயிரம் ரூபா சம்பளத்திலும் ஏமாற்று நாடகம் தொடர்கின்றது. தொழிற்சங்கம் மற்றும் அரசியலுக்கு அப்பால் மக்களுக்காக வீதியில் இறங்குவதற்கு நாம் தயார். மக்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கின்றது.’ – என்றார்.

## சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிக்கு எதிராக விசாரணை ஆரம்பம்

சப்ரகமுவ பகுதியில் கடமையாற்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தொடர்பில் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் தலைமையகத்தினால் இவ்வாறு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அபகீர்த்தியை ஏற்படுத்தும் விதமாக செயற்பட்டமை தொடர்பில் குறித்த பொலிஸ் அதிகாரிக்கு எதிராக விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## பல்கலைக்கழக மாணவர்கள் தடுப்பூசிபெற அக்கறையில்லை!

### வடக்கு சுகாதார முன்னாள் அமைச்சர் சத்தியலிங்கம் வேதனை



பல்கலைக்கழக மாணவர்கள் கொரோனாத் தடுப்பூசி பெறுவதில் அக்கறையற்ற நிலை யில் காணப்படுகின்றனர் என வடமாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும் வவுனியா பல்கலைக்கழகத்தின் வைத்தியருமான ப. சத்தியலிங்கம் வேதனையை வெளியிட்டுள்ளார்.

வவுனியா பல்கலைக்கழகத்தில் அண்மையில் பல்கலைக்கழக மாணவர்களுக்கான கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் பணி முன்னெடுக்கப்பட்டது.

இன்று உலக சுகாதார ஸ்தாபனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 6 தடுப்பூசிகளில் சினோபோர்மும் உள்ளடங்குகின்றது. எனவே பல நாடுகளுக்குச் செல்வதற்கான அனுமதி சினோபோர்ம் ஊசி ஏற்றியவர்களுக்கும் உண்டு.

இன்று தடுப்பூசி பெற்றவர்களின் இறப்பு வீதம் குறைவாக உள்ளது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு தடுப்பூசியைப் பெற ஆர்வம் காட்டவேண்டும் என்றும் அவர் மேலும் குறிப் பிட்டார்.

## மட்டு., அம்பாறை மாவட்டங்களுக்கு அமைச்சர் டக்ளஸ் 3 நாள் விஜயம்



மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்கின்றார்.

குறித்த மாவட்டங்களில் கடற்றொழில் சார் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சாத்தியமான அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாக ஆராயும் வகையில் இந்த விஜயம் அமையவுள்ளது.

அதனடிப்படையில் நேற்று (செவ்வாய்க் கிழமை) மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் கள விஜயத்தை மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாளை அம்பாறை மாவட்டத்தில் கள விஜயங்களை மேற்கொள்ள இருக்கின்றமையுடன், கடற்றொழில்சார் அமைப்புக்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடலிலும் ஈடுபடவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் வெள்ளிக் கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தில் கடற்றொழில் சார் அமைப்புக்களையும் அதிகாரிகளையும் அவர் சந்திக்கவுள்ளார்.

இவ்விரு மாவட்டங்களிலும் கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை போன்றவற்றில் மேற்கொள்ளக் கூடிய அபிவிருத்திகள் தொடர்பாகவும் மூன்று நாள் விஜயத்தின் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கவனம் செலுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# இளைஞர் மற்றும் யுவதிகளுக்கு வவுனியாவில் நியமனம் வழங்கல்





நிதி நெருக்கடிக்குள்ளும் நியமனம் வழங்கியிருக்கின்றமை என்பது ஒவ்வொரு வீட்டுக்கும் வாழ்வாதாரம் வழங்குவது போன்றாகும் என மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான கே.காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

ஒரு லட்சம் வேலைவாய்ப்பின் இரண்டாம் கட்ட நியமனங்களை வவுனியா நகர மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை வழங்கி வைத்துவிட்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தினுடைய துரித அபிவிருத்தி என்ற எண்ணக்கருவிற்கு அமைய அதனைச் செய்து முடிக்க ஆர்வமாக தலைமை தாங்கிய பிரதமர், நிதியமைச்சர் மற்றும் ஏனைய சிரேஷ்ட அமைச்சர்களும் சௌபாக்கிய வேலைத்திட்டத்தை செய்து முடிக்க காட்டுகின்ற அக்கறையால் தான் இந்த நியமனங்கள் வழங்கப்படுகின்றன.

கடந்த காலத் தலைவர்களால் இவ்வாறான செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படும் என்று இருந்த போது எதிர் தலைவர்களால் கேலிக்கையாகப் பார்க்கப்பட்டது. நடைமுறைக்கு சாத்தியமில்லை என விமர்சிக்கப்பட்டது. அதனை பொய்யாக்கும் செயலாகத் தான் முதல் கட்டமாக 35 ஆயிரம் நியமனங்கள் வழங்கப்பட்டு, இரண்டாம் கட்டமாக தான் இந்த நியமனங்கள் வழங்கப்படுகின்றன.

வன்னி மாவட்டத்தில் கிட்டத்தட்ட 262 நியமனங்கள் வழங்கப்படுகின்றன. தற்காலத்தில் கொவிட் வைரஸ் தொற்றால் உலக ரீதியில் அனைத்து நாடுகளும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கின்றன. இதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல. இவ்வாறான நிதி நெருக்கடிக்குள்ளும் நியமனம் வழங்கியிருப்பது ஒவ்வொரு வீட்டுக்கும் வாழ்வாதாரம் வழங்குவது போன்றாகும்.

கடந்த காலங்களில் வருமானம் குறைந்த கல்வித் தகைமை குறைந்தவர்களுக்கு அரச நியமனம் வழங்கப்படுவதில்லை. ஆனால் அவ்வாறு தகைமை குறைந்த ஒரு லட்சம் பேருக்கு அரச நியமனம் வழங்கப்படுவதாக ஜனாதிபதி, அனைத்து அமைச்சர்களும் செயற்படுத்த காட்டும் உத்வேகத்தில் தெரிகின்றது.

மக்கள் மேல் அரசாங்கம் வைத்திருக்கும் கரிசனை. இன்று நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்தாலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதில் அரசாங்கம் குறியாக இருப்பதால் தான் வேலைவாய்ப்பு, உள்ளக வீதி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த காலத்துடன் ஒப்பிட்டு பார்க்கின்றபோது பாரிய அபிவிருத்தி நடைபெற்றிருக்கின்றது. 5 ஆயிரம் குள அபிவிருத்தி வேலைத்திட்டத்திலும் வன்னி மாவட்டத்தில் பல நூற்றுக்கணக்கான குளங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உட்கட்டமைப்பு வேலைத்திட்டங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக எமது பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக பல அமைச்சர்களால் பல வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு இருக்கின்றன.

கடந்த பல வருடங்களாக வரவு – செலவுத் திட்டத்துக்குரிய பாதீட்டை வாசிப்பதற்கு அதிகாரிகள் எடுக்கும் முடிவுதான் ஆனால் இந்த தடவை கிராமத்துக்கு இடையிலான உரையாடல் என்ற நிகழ்ச்சி மூலமும், ஒவ்வொரு பிரதேச சபை வட்டாரங்களுக்குரிய நிதி கிராம சேவை பிரிவுகளுக்கான நிதியும் பாரிய அளவில் ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

குறிப்பாக கிராமத்துக்கான உரையாடல் நிகழ்ச்சி மூலம் 30 லட்சம் ரூபா நிதி ஒவ்வொரு கிராம செயலர் பிரிவிற்கும் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் என்ற ரீதியில் 10 கோடி ரூபா வழங்கப்பட்டு வேலைதிட்டங்கள், அபிவிருத்தி திட்டங்கள் செயற்படுத்தப்பட இருக்கின்றன.

அபிவிருத்திகள் ஒரு பக்கம் நடந்தாலும் மக்களுடைய உரிமைகள் குறிப்பாக சொல்வதென்றால் காணிப்பிரச்சினைகள் இது சம்பந்தமாக நாங்கள் காணி சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், காடு சம்பந்தப்பட்ட அமைச்சர்களையும் நாங்கள் அழைத்திருக்கின்றோம்.

ஏனெனில் அவர்கள் மூலமே சரியான தீர்வை நாம் பெறமுடியும். ஏனெனில் அங்கிருந்து அனுப்புகின்ற சுற்றறிக்கையின் படியே இங்கிருக்கும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கின்றார்கள்.

எனவே கொவிட் தொற்றினாலே இந் நடவடிக்கைகள் தாமதமடைந்திருக்கின்றன. விரைவாக இது சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் தீர்வைப் பெற்றுத் தருவார்கள் என நினைக்கின்றேன்.

நியமனம் பெற வந்திருப்பவர்களிடம் நாம் எதிர்பார்ப்பது உங்களுக்கு தருகின்ற நியமனங்களை மக்களுக்கு ஏற்ற விதத்திலும் மக்கள் பாதிக்கப்படாத வகையிலும் அரசாங்கத்துக்கு விசுவாசமான முறையிலும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த நியமனம் மூலம் உங்கள் குடும்பம், உறவுகள் நன்மையடைய வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபனின் சிபார்சின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 39 இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கி வைத்து பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் –

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் ஆசிர்வாதத்துடன், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் நெறிப்படுத்தலில் எமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக நாம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக 39 பேருக்கு நியமனப் பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக இது வழங்கப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் மேலும் பல இளைஞர், யுவதிகளை சிபார்சு செய்து வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்போம். எமது நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை தலைதூக்கியுள்ள நிலையில் இந்த நியமனம் எமது இளைஞர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.

எனவே இதனை இளைஞர், யுவதிகள் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். கொவிட் அச்சுறுத்தலால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கம் இந்த வேலைவாய்ப்பை வழங்கியுள்ளது. இதனை புரிந்து கொள்ள வேண்டும். மக்கள் நலனை கருத்திற்கொண்டே அரசாங்கம் தனது நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

# எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ள நான் தயார்!

## மைத்திரியின் புதல்வர் அறிவிப்பு

எதிர்காலத்தில் பொலன்னறுவை மாவட்டத்துக்கும், பொலன்னறுவை மாவட்ட மக்களுக்கும் வரக்கூடிய எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளத் தயார் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புதல்வர் தஹாம் சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொலன்னறுவை மாவட்ட மகளிர் மற்றும் இளைஞர் பேரவைகளை ஸ்தாபிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொலன்னறுவை மாவட்ட இளைஞர் சம்மேளனத்தின் தலைவராகவும் தஹாம் சிறிசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொலன்னறுவை மாவட்ட இளைஞர் பேரவையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட தஹாம் சிறிசேன, பொலன்னறுவை மாவட்டத்தின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் சம்மேளனத்தின் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியுடன், பல இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நெருக்கடியை சமாளிக்க நீண்டகால திருத்த நடவடிக்கை தேவை. இவ்வாறான வேலைத்திட்டத்தை முன்னோக்கி கொண்டு செல்லக்கூடிய ஒரே கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே ஆகும்.

பொலன்னறுவை மாவட்டமும், பொலன்னறுவை மக்களும் தனது தந்தையின் இதயம் எனவும், எதிர்காலத்தில் பொலன்னறுவை மாவட்ட மக்களுக்கும், பொலன்னறுவை மக்களுக்கும் வரக்கூடிய எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளத் தயார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நிருபமா ராஜபக்ஷ விசாரணைக்கு அழைப்பு!

முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்படவுள்ளார் என பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பண்டோரா ஆவணங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சொத்துக்கள் தொடர்பாக வாக்குமூலமொன்றை வழங்குவதற்காக அவர் விசாரணைக்கு அழைக்கப்பட உள்ளார்.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிருபமா ராஜபக்ஷவின் கணவர் திருக்குமார் நடேசனுக்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு இரண்டு தடவைகள் சம்மன் அனுப்பப்பட்டு வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. எனினும், தம் மீது சுமத்தப்பட்ட பெரும்பாலான குற்றச்சாட்டுகளை திருக்குமார் நடேசன் மறுத்துள்ளார்.

இதேவேளை, நிருபமா ராஜபக்ஷ 1994 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை சுமார் 16 வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினராகவும், பிரதி அமைச்சராகவும், இராஜாங்க அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார்.

கறுப்புப் பணம் மூலம் அரசியல் தலைவர்கள், தொழில் அதிபர்கள், பிரபலங்கள் வெளிநாடுகளில் சொத்துக்களை வாங்கி குவித்த ஆவணங்களை பண்டோரா பேப்பர்ஸ் அண்மையில் வெளியிட்டிருந்தது.



இதில், இலங்கையின் முன்னாள் பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ மற்றும் அவரின் கணவர் திருக்குமார் நடேசன் ஆகியோரின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

இந்த விவகாரம் தற்போது கொழும்பு அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதனையடுத்து, இந்த விடயம் தொடர்பில் உடனடி விசாரணைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அங்கம் - 173

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்



### 433. மக்களின் நிரந்தரத் தீர்ப்பாயத்திற்கு தமிழருக்கெதிரான அட்டூழியங்கள் எப்படி யாரால் பாரப்படுத்தப்பட்டன?

ஸ்ரீலங்காவின் அமைதிக்கான அயர்லாந்தின் அமைப்பு (Irish forum For Peace in Sri Lanka) என்பதின் முன்னெடுப்பில் ஜேர்மனியில் இயங்கிய சர்வதேச மனித உரிமைகள் அமைப்பும் (International Human Rights Association - Bremen) இணைந்து தீர்ப்பாயத்திற்கு சமர்ப்பணங்கள் வைத்தன.

2002 இல் நோர்வேயினூடான போர்நிறுத்தத்தையும் சமாதான பேச்சுவார்த்தைகளையும் சர்வதேசம் முழு முற்றாக ஆதரித்தது. அதன் அடிப்படை ஓர் இனம் தனது பிரச்சினைக்கு ஆயுதங்கள் மூலம் தீர்வு காணமுடியாது என்ற பட்டறிவுதான்.

ஆகவே, 2008 இல் இந்தப் போர் நிறுத்தம், ஒதுக்கப்பட்டு யுத்தம் மீள ஆரம்பிக்கப்பட்ட போது ஸ்ரீலங்காவின் முழுத்திட்டமே விடுதலைப் புலிகள் முற்றாக அழிக்கப்பட்டு, அவர்களின் கைகளிலிருந்த முழுப்பிரதேசங்களும் மீளக் கைப்பற்றப்படவேண்டும் என்பது தான். அப்படியான எண்ணத்தில் தொடங்கப்பட்ட யுத்தம் 18 மே மாதம் 2009 இல் பலத்த உயிர் சேதங்களுக்கும் பாரிய அழிவுகளுக்கும் இடையில் வெற்றி கொள்ளப்பட்டது என ஸ்ரீலங்கா அரசு அறிவித்தது. சர்வதேச ஊடகங்கள் இது 'சாட்சிகள் இல்லாமல் நடந்த




யுத்தம்' ( War without witness ) என்று வர்ணித்தன. போர் வலயத்தில் எந்த ஊடக நிருபரோ, நிவாரணக்குழுவினரோ, எவருமே அனுமதிக்கப்படவில்லை.

ஐ.நாவின் அங்கத்துவ அமைப்புக்களிடையே பரிமாறப்பட்ட ஆவணங்களின்படி வான் தாக்குதல்களாலும் பாரிய ஆயுதங்களின் பாவனையாலும் தினமும் சராசரி 116 பேர் இறந்து கொண்டிருந்தனர் எனத் தெரியப்பட்டது. கடைசி நாள்களில் பாரிய ஆயுதங்கள் பரவலாக மக்கள் நெரிசலாகப் பாதுகாப்புத் தேடிய இடங்களில் பாவிக்கப்பட்டமையால் கிட்டத்தட்ட 20,000 இற்கு மேற்பட்ட மக்கள் இறந்தனர் எனப் பிரித்தானிய, பிரெஞ்சு ஊடகங்கள் அறிவித்தன. மனித உரிமைகள் கண்காணிப்பு ஆணையகம் (Human Rights Watch) போர்வலயப் பகுதிகளில் இயங்கிய ஆஸ்பத்திரிகள் தாக்கப்பட்டமையையும், பின்னர் 280,000 இற்கும் அதிகமான மக்கள் சுதந்திர நடமாட்டமற்று முகாம்களில் அடக்கப்பட்டு, அங்கு நடந்த பல்வேறு அட்டூழியங்களையும் சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தியது.

அந்த நாட்டின் மக்கள் என்ற எதுவித எண்ணச் சிந்தனையுமின்றி யுத்தத்தில் பெற்றி பெற்ற ஒருவன் எதிரிகளைச் சிறைப்பிடித்து, அடிமைகள் மாதிரி கொடுமைப்படுத்துவது போன்று அவர்கள் நடத்தப்பட்டனர். ஸ்ரீலங்கா அரசாங்கமோ தாங்கள் யுத்த வெற்றி ஒன்றை அடைந்துவிட்டோம் என்று தங்களது எண்ணங்களுக்கு ஏற்றவாறு தமிழீழ மக்களையும் பிரதேசங்களையும் நடத்தினாலும், ஏற்படுத்தப்பட்ட மனித உரிமை மீறல்களோ, அட்டூழியங்களோ சர்வதேசங்களால் ஆராயப்படும் தன்மை தெரியப்படவில்லை. ஐ.நாவில் சர்வதேச மனித உரிமை மன்று நடைபெற்ற மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கான எத்தனங்களை மேற்கொண்டாலும் அவை பலம் பொருந்திய நாடுகளால் மறைக்கப்பட்டு, அங்கத்துவ நாடுகள் ஸ்ரீலங்கா அரசு பயங்கரவாதத்தை தனது நாட்டில் முற்றுக்குக் கொண்டு வந்ததற்காகப் புகழாரம் சூட்டின. சர்வதேசத்தினதும், ஐ.நாவினதும் இந்த அசிரத்தையும், கணக்கெடுக்காத தன்மையும் தான், மனித உரிமைகள் மீறல்களும் அட்டூழியங்களும் ஆராயப்பட்டு, உண்மைகள் கண்டறியப்படுவது நீதியான சமாதானம் ஏற்படுத்துவதற்கு முக்கியம் என்ற தீர்மானத்தை முதல்படியாக நாட வைத்தது.

மே 2009 இல் 'ஸ்ரீலங்காவின் அமைதிக்கான அயர்லாந்தின் அமைப்பு' பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை ஐரோப்பாவில் சக மனித உரிமை மன்றங்களுடன் நடத்தியது. ஒரு சர்வதேசக் குழு ஸ்ரீலங்காவிற்குச் சென்று முகாம்களைப் பார்வையிட்டு, அங்குள்ளோரிடம் செவ்விகள் பெற்று, அவற்றின் அடிப்படையில் ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த உத்தேசித்தது. ஆனால் போரின் வெற்றிக் களிப்பிலும், வெற்றியின் உண்மையற்ற கபடத்திலும் ஸ்ரீலங்கா அப்பொழுது அங்கிருந்த முகாம்களைப் பற்றி செய்திகள் அனுப்பிய வெளிநாட்டு அதிகாரிகளையும் தன்னார்வ குழுக்களையும் வெளியேற்றியதால் தனது இந்த






அணுகுமுறை ஸ்ரீலங்காவின் ஆதரவைப் பெறப்போவதில்லை என அந்த அமைப்பால் உணரப்பட்டது.

(இதைப்பற்றிய அப்போதைய வெளிவிவகார அரசின் காரியதரிசி பாலித கோஹன்னவின் செவ்வி ஒன்றை முன்னர் ஓர் அங்கத்தில் குறித்திருந்தேன்.)

ஆகவே, முன்னைய திட்டத்தைக் கைவிட்டு, பெறக்கூடிய தகவல்களின் அடிப்படையில் நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தை முன்னர் ரஸ்ஸல் (Russel) தீர்ப்பாயம் வியட்நாம் ஆராய்வுக்கு முற்படுத்திய வழிமுறைகளில் இதனை விசாரிக்கக் கோரி பாரப்படுத்தினர்.

(07ஆம் பக்கம் பார்க்க)

# ஒரே பிரசவத்தில் ஆறு குழந்தைகள்!

## நலன் விசாரித்தார் ஷிரந்தி



பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ நைன்வெல்ஸ் தனியார் மருத்துவமனைக்கு விஜயம் செய்து ஒரே பிரசவத்தில் பிறந்த ஆறு குழந்தைகளின் நலன் விசாரித்ததுடன், குழந்தைகளின் பெற்றோருடன் நட்பு ரீதியான கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 21 ஆம் திகதி அதிகாலை ஒரே பிரசவத்தில் இந்த ஆறு குழந்தைகளும் பிறந்துள்ளதுடன், அவர்களில் மூவர் ஆண் குழந்தைகள், மூவர் பெண் குழந்தைகள் ஆவர்.

திலினி வாசனா மற்றும் பிரபாத் உதயங்க மரவனாகொட தம்பதியினருக்கு பிறந்த ஆறு குழந்தைகளின் நலன் விசாரிப்பதற்காக சென்ற பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ, நைன்வெல்ஸ் மருத்துவமனையின் சிரேஷ்ட செயற்பாட்டு முகாமையாளர் சுசந்த பீரிஸ் உள்ளிட்ட ஊழியர்களால் வரவேற்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து பிரதமரின் பாரியார் ஒரே பிரசவத்தில் பிறந்த ஆறு குழந்தைகளின் நலன் விசாரித்தமையுடன், குழந்தைகளின் பெற்றோருடன் நட்பு ரீதியாகக் கலந்துரையாடினார்.

குழந்தைகள் மற்றும் பெற்றோருக்கு பரிசுப் பொருள்களை வழங்கிய பிரதமரின் பாரியார், எதிர்காலத்தில் அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு முன்வருவதற்குத் தயார் எனவும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நைன்வெல்ஸ் மருத்துவமனையின் முகாமைத்துவ பணிப்பாளர் தியோ பெர்னாண்டோ உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# இனப் படுகொலையும் ....

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

**434. எவை ஆராயப்பட வேண்டும் எனக் கோரப்பட்டது?**

இரண்டு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

முதலாவது – நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் ஸ்ரீலங்கா அரசும் அதனது படைகளும் கடைசிக்கட்ட யுத்தங்களில் போர்க்குற்றங்களும் மனித குலத்திற்கெதிரான குற்றங்களும் புரிந்தன என ஆராய வேண்டும்.

**The Permanent Peoples Tribunal will investigate the allegations that the Government of Sri Lanka and its armed forces committed war crimes and crimes against humanity during its final phase of the war with the Liberation Tigers of Tamil Eelam)**

இரண்டாவது – தீர்ப்பாயம் போர் முடிவிலிலும், அதற்கு மேலும் நடத்தப்பட்ட மனித உரிமைகள் மீறல்களையும் விசாரித்து 2002 இல் போர் நிறுத்த ஒப்பந்தம் சரிந்து விழுந்ததற்கான உள்நாட்டு, வெளிநாட்டுக் காரணிகளையும் கண்டறிதல் வேண்டும்.

**The Tribunal will also examine violations of human rights in the aftermath of the war and the local and international factors that led to the collapse of the 2002 ceasefire agreement)**

மனித உரிமை அமைப்புக்கள், சட்டத்தரணிகள், சட்டவாளர்கள், ஐ.நாவின் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் சாட்சியங்கள் தரவும், தங்கள் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும் அழைக்கப்பட்டனர். 2002 இல் ஏற்படுத்தப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் நோர்வேயின் ஈடுபாட்டால் ஏற்படுத்தப்பட்டது. அதற்கு அனுசரணையாக அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஜப்பான் இணைத் தலைமைப் பதவிகளையும் **(Co - Chairs)** வகித்தன. நோர்டிக் **(Nordic)** பிராந்திய அரசுகளின் பிரதிநிதிகளே யுத்த நிறுத்தக் கண்காணிப்புகளை மேற்பார்வை செய்தனர். இவர்களின் யுத்த நிறுத்த ஒப்பந்தம் சரிக்கப்பட்டதுக்கான அறிவித்தல்களும் பெறுவதற்கு ஆவன செய்யப்பட்டது.

பல நாட்டுப் பிரதிநிதிகளைக் கொண்ட தீர்ப்பாயத்தையும் அயர்லாந்திலேயே அதை நடத்துவதாகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு, யுத்த நிறுத்தக் கண்காணிப்பை மேற்பார்வை செய்தவர்களின் சாட்சியங்களும் அறிக்கைகளும் கோரப்பட்டன. அயர்லாந்தில் அப்படியான சமாதானப் பேச்சுவார்த்தைகள் காலனித்துவத்தின் பின் நடந்ததாலும், அயர்லாந்து அணிசேரா நாடாக இருந்ததாலும் அங்கு அதனை நடத்துவது உசிதமெனக் கருதப்பட்டது.

(வளரும்...)

# வடக்கில் பண முதலைகளால் எங்கள் கடல் வளம் அழிப்பு!

## குருநகர் போராட்டத்துக்கு எதிராகச் சுகிர்தன் கருத்து

**(இ.கலையமுதன்)**

வடக்கில் கடலையே நம்பி பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றார்கள். ஆனால், வடக்கில் பல பண முதலைகள் அந்தக் கடல் வளத்தையே அழிக்கப் பார்க்கின்றார்கள்.

– இவ்வாறு முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் குற்றஞ்சாட்டினார்.

நேற்று குருநகரில் முன்னெடுக்கப்பட்ட மீனவர்களின் எதிர்ப்புப் போராட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-




வடக்கில் ட்ரோலர் தொழில் செய்வோர் பலர் அரச உத்தியோகத்தர்களாகவும், வேறு தொழில் முயற்சியிலும் ஈடுபடுபவர்களே. தொடர்சியாக கடல் தொழிலில் ஈடுபடும் ஒரு சிலரே ட்ரோலர் வைத்துள்ளார்கள். அவர்கள் தங்கள் குடும்பத்தைப் போலவே கடலையும் நேசிப்பவர்கள். ஆனால், கடலைக் கொள்ளையடிக்க முதலீடு செய்தவர்கள் எந்த எல்லைக்கும் போவார்கள். அவர்களை கண்டு நாங்கள் பயப்படப்போவதும் இல்லை.

ஒரு சிலர் வாழ்வதற்காக எங்கள் மண் வளத்தையும் கடல் வளத்தையும் அழிப்பதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

உருவப்பொம்மை என்ன எங்களைச் சுட்டுப் போட்டாலும் எங்கள் வளங்களை அழிப்பவர்களுக்கு எதிராகப் போராடுவோம்.

குடத்தனையில் மணல் கொள்ளைக்கு எதிராகப் போராடிய நண்பன் கேதீஸை சுட்டுக் கொன்றதை நாம் மறக்கவும் இல்லை. அதற்குப் பயந்து மணல் கொள்ளையைத் தடுத்து நிறுத்தாமல் பயந்து ஒதுங்கவும் இல்லை. ஆகவே, எங்கள் போராட்டம் தொடரும் – என்றார்.

# அஸாத் ஸாலியின் விளக்கமறியல் நீடிப்பு

மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத் ஸாலி மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) அவர் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது அவரை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 09 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த மார்ச் மாதம் 16 ஆம் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் அஸாத் ஸாலி கைது செய்யப்பட்டிருந்தார்.

மார்ச் மாதம் 09 ஆம் திகதி அவர் தெரிவித்திருந்த சர்ச்சைக்குரிய கருத்து காரணமாக இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடபகுதி லயன்ஸ் கழகங்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கல்!

## லயன் ரெங்கநாதன் வழங்கினார்







வடபகுதியைச் சேர்ந்த 20 லயன்ஸ் கழகங்களுக்கு தமது பிரதேசத்தில் பார்வைக் குறைபாடுடைய மக்களுக்கு ஒளியூட்டுவதற்காக மோதிர மட்டக்குளி லயன்ஸ் கழக உறுப்பினரும் கொமர்ஷல் வங்கியின் நிர்வாக இயக்குநரும் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளருமாகிய லயன் எஸ்.ரெங்கநாதனால் 100 கண்ணாடிகள் விகிதம் வழங்கப்பட்டன.

லயன்ஸ் கழகத்தின் பிரதான நோக்கக் கூறுகளில் ஒன்று பார்வைக்கு முன்னுரிமை வழங்குவதாகும். அந்தவகையிலே லயன் எஸ்.ரெங்கநாதனின் தூரநோக்கு சிந்தனையால் எமது வடபகுதியிலுள்ள கிராமப்புற வசதிகுறைந்த மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவதற்காக வடபகுதியில் உள்ள 36 கழகங்களில் முதற்கட்டமாக 20 கழகங்களுக்கு ஒவ்வொரு கழகத்துக்கும் 100 கண்ணாடிகள் விகிதம் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணத்திலுள்ள ஈ – சிற்றி ஆங்கிலக் கல்லூரியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் லயன்ஸ் கழகங்களின் அனைத்து மாவட்டங்களுக்குமான முன்னாள் தலைவர் லயன் தேவா பீற்றர், 2 ஆவது உப மாவட்ட ஆளுநர் லயன் பிளஸிடஸ் பீற்றர், முன்னாள் ஆளுநர் லயன் எஸ்.ராகவன், மோதிர மட்டக்குளி லயன்ஸ் கழக உறுப்பினர்கள் ஆகியோர் லயன் ரெங்கநாதன் தம்பதிகளுடன் இணைந்து மூக்குக் கண்ணாடிகளை வழங்கிவைத்தனர்.

# சமய கலாசாரத்தைப் பிரதிபலிப்பனவாக சுற்றுலாத்துறை மாற்றமடைய வேண்டும்!

## வைத்தியர் யமுனானந்தா கோரிக்கை



தீ நுண்மிப் பெருந்தொற்றுக்கு பின்பான சமூகச் சூழலில் மக்கள் பொருளியல் ரீதியில் அதிகம் பாதிக்கப்பட்டு உள்ளனர். வேலைவாய்ப்பின்மை, பொருள்களின் விலை ஏற்றம் என்பன பல்வேறு சமூக உளத் தாக்கங்களை ஏற்படுத்த வல்லன. இவற்றினை எதிர்கொள்ள எமது சமூகத்தை தயார்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

தென்னிந்திய திருத்தல யாத்திரையை யாழ்.குடா நாட்டுக்கும் விஸ்தரித்தல் பெருமளவு சுற்றுலா வருமானத்தை பெற்றுக் கொடுக்கும். யாழ்.குடா நாட்டில் உள்ள திருத்தலங்கள் பற்றிய விளம்பரங்கள் இந்தியாவில் பிரபல்யப்படுத்தப்படுவதால் இந்தியாவிலிருந்து பெருமளவான இந்துக்கள் தமது விடுமுறை சுற்றுலா தலமாக யாழ்.குடா நாட்டை மாற்ற முடியும். தீ நுண்மிப் பேரிடருக்கு பின்பான சமூகத்தின் பொருளாதார மீட்சிக்கு எமது பிரதேசத்தின் நுண்நிதிய வளர்ச்சிக்கும் மக்களின் இயல்பு வாழ்விற்கும் புதிய வருவாய் ஈட்டும் எத்தனங்களில் நாம் ஈடுபடல் வேண்டும். நவீன உலக ஒழுங்கில் சுற்றுலாத்துறை மிகவும் முக்கியமான உலகியல் வர்த்தகம் ஆகும். இதனை எமது சமய கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் மாற்றியமைப்பது எமது கடமையாகும்.

- இவ்வாறு கோரிக்கை முன்வைத்துள்ளார் வைத்தியர் சி.யமுனானந்தார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

யாழ்.குடா நாட்டில் நாகர் கால வழிபாட்டுச் சின்னங்கள் நாகர் கோயில், வல்லிபுரம், மாவிட்டபுரம், நயினாதீவு ஆகிய தலங்களில் உள்ளன. குறிப்பாக திருப்பாற் கடலில் திருமாலின் சக்கரம் வல்லிபுர ஆழ்வார் கோயிலில் அமைந்துள்ளமை பெருமளவான இந்திய பக்தர்களை இங்கு வரவழைக்கும். அதே போல் ஆஞ்சநேயரால் இலங்கைக்கு எடுத்து வரப்பட்ட சஞ்சீவ மலையின் எச்சங்கள் நெடுந்தீவில் உள்ளமை பற்றியும் சேது இராட்சிய சின்னங்கள் நெடுந்தீவில் உள்ளமை பற்றியும் உரிய முறையில் கலாசார சுற்றுலா வர்த்தகம் மேற்கொள்ளப்படல் அவசியம்.

எமது சமூகத்துக்குத் தேவையான ஆதரவை அந்தந்த பிரதேசங்களில் இயங்கும் ஆலயங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் மூலம் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக அடுத்து வரும் மூன்று வருடங்களுக்கு கிராமிய விவசாய முதலீடுகளுக்கு ஊக்குவிப்பு வழங்கப்படல் வேண்டும். சிறு கைத்தொழில் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கப்படல் வேண்டும். மாறாக, பிரமாண்டமான கட்டடங்களோ விஸ்தீரணக் கட்டுமாணங்களிலோ முதலீடு செய்வதால் சமூகத்தில் வறுமையில் உள்ளவர்களை மீட்க முடியாது போகும்.

எனவே, சமய சமூக பெரியோர்களும் ஆலய நிர்வாக சபையினரும் தீ நுண்மித் தொற்றுக்கு பின்பான சமூக உள மேம்படுத்தலில் ஆக்கபூர்வமாக ஈடுபடல் வேண்டும். பெரும்பாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வெறுமனே நிவாரணத்தை வழங்காது சுய தொழில் முதலீட்டு உற்பத்திகளை ஏற்படுத்த வேண்டும்.

மேலும் வேலைவாய்ப்பை உருவாக்கும் பல்வேறு கைத்தொழில்களை உருவாக்க வேண்டும். தீ நுண்மிப் பேரிடர் காவு கொண்ட சமூக உளத்திலிருந்து மீள சமூக மூலதனமிடல் மிகவும் இன்றியமையாதது ஆகின்றது. அதனை நன்கே வகுத்தல் எமது கடமையாகின்றது. - என்றுள்ளது.

# கௌதம் அதானியின் விஜயம் உத்தியோகபூர்வமற்ற ஒன்றே!

## அரசு தெரிவிப்பு



இந்தியாவின் கோடீஸ்வர வர்த்தகர் கௌதம் அதானியின் இலங்கை விஜயம் உத்தியோகபூர்வ விஜயம் அல்ல, அது ஒரு தனிப்பட்ட விஜயம் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், அதானி நிறுவனம் இலங்கையில் உள்ள ஏனைய முதலீட்டுவாய்ப்புகள் தொடர்பாக ஆராயவுள்ளதாகக் கூறினார்.

முதலீட்டாளர்கள் வருகை தருவதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவது அரசாங்கத்தின் பொறுப்பு எனக் குறிப்பிட்ட அமைச்சர், நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாட்டைத் தீர்ப்பதற்கும் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பது அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பு துறைமுகத்தில் மேற்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கு அதானி நிறுவனம் ஏற்கனவே விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

இலங்கைக்கு வந்துள்ள கௌதம் அதானி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்திப்பார் என இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டிருந்த போதும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு இதுவரை அதனை உறுதி செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கட்சி முடிவெடுக்குமானால் பதவிகளை துறக்கத் தயார்

## சுதந்திரக் கட்சி அதிரடி



அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவதற்கு கட்சி முடிவெடுத்தால் பதவிகளை துறந்துவிட்டு நாளையே வெளியேறுவதற்குத் தயாராக இருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசிலிருந்து வெளியேற வேண்டும் எனப் பலரும் கருத்துகளைத் தெரிவித்துவரும் நிலையிலேயே அக்கட்சியின் உப தலைவரும், அமைச்சருமான மஹிந்த அமரவீர இதனைத் தெரிவித்தார்.

உரப்பிரச்சினை மற்றும் அதிபர், ஆசிரியர்களின் போராட்டம் ஆகியன தொடர்பாக தாம் விமர்சனங்களை முன்வைத்துவரும் நிலையில் அரசாங்கத்தில் இருந்து வெளியேறும்படி ஒருசில தரப்பினர் வலியுறுத்திவருகின்றனர் எனவும் கூறினார்.

கட்சி ஒருமனதாக தீர்மானித்தால் நாளையே பதவிகளைத் துறந்துவிட்டு வெளியேறுவதற்குத் தயாராக இருக்கிறேன் என தெரிவித்த மஹிந்த அமரவீர, எனினும் அத்தகையதொரு முடிவை கட்சி இன்னும் எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தில் இருந்து வெளியேறினால் கைப் பாவையாக இருக்கும் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி ஆக்க முடியுமா அல்லது தோல்வியடைந்த தலைவரான ரணிலை மீண்டும் பலப்படுத்துவதா என்ற பிரச்சினை காணப்படுவதாகவும் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

# வாக்குக்கேட்டு ஊருக்குள் வந்தால் மண்வெட்டிதான் இனிப் பதிலளிக்கும்!

## விவசாயிகள் எச்சரிக்கை



விவசாயம் தொடர்பாகத் தெரியாத அமைச்சர் வாக்கு கேட்டு ஊருக்குள் வந்தால் அவர்களுக்கு மண்வெட்டி பதிலளிக்கும் என வெலிமடை பிரதேச விவசாயிகள் எச்சரித்துள்ளனர்.

பதுளை - வெலிமடை விவசாயிகள் நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போதே அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

தமது பொறுமைக்கும் எல்லை உண்டு எனக் குறிப்பிட்ட விவசாயிகள் தற்போது பெரும்போகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளபோதும் விவசாயத்தை முன்னெடுக்க வழியில்லாமல் இருப்பதாகவும் குறிப்பிட்டனர்.

அமைச்சரால் இரசாயன உரம் இன்றி விவசாயம் செய்யமுடியும் என்பதை நிரூபித்து காட்ட முடியுமா என்றும் அவர்கள் சவால் விடுத்தனர்.

இரசாயன உரப் பாவனைக்கு இலங்கையில் தடை விடுக்கப்பட்டுள்ள நிலையில் தமக்கு உரத்தை வழங்குமாறு கோரி விவசாயிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பல்கலைக்கழகங்களை மீண்டும் திறக்க அனுமதி

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் கட்டம் கட்டமாக அரச பல்கலைக்கழகங்களை மீண்டும் திறக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

மீண்டும் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான திகதிகளை தீர்மானிப்பதற்கான அனுமதி அந்தந்த பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

முதல் கட்டத்தின் கீழ், கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்று இரு வாரங்கள் கடந்த மாணவர்கள் மட்டுமே விரிவுரைகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள். முதல் கட்டத்தின் கீழ் 25 சதவீத மாணவர்களுடன் மட்டுமே கல்வி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# குடிசையில் வாழ்ந்த குடும்பம் ஒன்றுக்கு சுவிஸ் உதயம் அமைப்பால் நிரந்தர வீடு



மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மிகவும் வறிய நிலையில் எந்த அடிப்படைவசதியும் அற்ற நிலையில் குடிசையில் வாழ்ந்த குடும்பம் ஒன்றுக்கு வீடு ஒன்றைக் கட்டி வழங்குவதற்கான ஏற்பாட்டை சுவிஸ் உதயம் அமைப்பு முன்னெடுத்துள்ளது.

செங்கலடி பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட கரடியன்குளம் பகுதியில் களிமண் வீட்டில் யானைகளின் அட்டகாசத்துக்கு மத்தியில் சிறுகுழந்தைகளுடன் வாழும் குடும்பத்துக்கே இந்த வீட்டைக் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுவிஸ் உதயம் அமைப்பின் பிரதிநிதிகள் இப்பகுதியில் களவிஜயத்தை மேற்கொண்டபோது குறித்த குடும்பத்தின் நிலைமை தொடர்பான தகவல்கள் பெறப்பட்டு அவை சுவிஸ் உதயம் அமைப்பின் தாய்ச்சங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சுவிஸ் உதயம் அமைப்பின் பொருளாளர் துரைநாயகத்தின் முயற்சியால் சுமார் ஆறு லட்சம் ரூபா செலவில் இந்த வீட்டினை அமைத்துக்கொடுப்பதற்கான பணிகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

சுவிஸ் உதயம் அமைப்பின் கிழக்கு மாகாண கிளையின் மட்டக்களப்பு இணைப்பாளர் றொமிலா செங்கமலன் தலைமையில் இந்த வீட்டை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெற்றது.

மூன்று குழந்தைகளுடன் கூலித்தொழில் செய்துவரும் குடும்பத்தினர் நீண்டகாலமாக களிமண் வீட்டில் வசித்துவந்த நிலையில் சுவிஸ் உதயம் அமைப்பின் ஊடாக அவர்களுக்கான வீடு அமைத்துக்கொடுக்க நடவடிக்கையெடுக்கப்பட்டதற்கு அப்பிரதேச மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.





# கல்முனை வீதியில் பாரிய விபத்து 6 வாகனங்களுக்கு பெரும் சேதம்!

மட்டக்களப்பு,ஒக்.27

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள காத்தான்குடி பிரதான வீதியில் நேற்று (செவ்வாய்கிழமை) நண்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரு லொறி, ஓட்டோ, நான்கு மோட்டார் சைக்கிள்கள் என்பன சேதமடைந்துள்ளன.

மட்டக்களப்பிலிருந்து வந்த சிறிய லொறியொன்று காத்தான்குடி மட்டக்களப்பு பிரதான வீதியிலுள்ள எல்லையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ மற்றும் நான்கு மோட்டார் சைக்கிள் என்பவற்றுடன் மோதியுள்ளது.

இதில் குறித்த லொறி உட்பட ஓட்டோ என்பன சேதமடைந்துள்ளமையுடன் நான்கு மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளன.

லொறி ஓட்டோவில் மோதுண்டுள்ளதுடன் அவ்விடத்திலுள்ள மர ஆலையொன்றுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. அந்த இடத்திலுள்ள வீதி ஓரத்தில் நின்ற மரமொன்றுடனும் இந்த லொறி மோதியதில் மரத்துக்கும் சிறிய சேதம் ஏற்பட்டுள்ளது.

எனினும் இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லையென காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு வருகைதந்த காத்தான்குடி பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டமையுடன் வாகனங்களை அப்புறப்படுத்தி போக்குவரத்தை சீர் செய்தனர்.

# துப்பாக்கி சூடு; ஒருவர் சாவு

கொட்டிகாவத்த, முல்லோரியா பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று (செவ்வாய்க் கிழமை) காலை 6.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் 42 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் முல்லேரியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 11 பங்காளிக் கட்சிகளும் புலம்பலை கைவிட வேண்டும்

## அஜித் பி. பெரேரா கோரிக்கை

அரசாங்கத்தை விட்டு வெளியேறாமல் 11 பங்காளிக் கட்சிகளும் பிரச்சினைகள் தொடர்பில் தொடர்ந்தும் புலம்பிக்கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை என அஜித் பி. பெரேரா குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் கட்சிகள் நியாயமற்ற முறையில் நடத்தப்பட்டால், அவர்கள் எப்போது வேண்டுமானாலும் அரசாங்கத்தை விட்டு வெளியேற முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறு அரசாங்கத்தை விட்டு வெளியேறிய பின்னரும் அவர்களால் அரசியலில் ஈடுபட முடியும் என்றும் அஜித் பி. பெரேரா சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்துக்குள் இருக்கும் இந்தக் கட்சிகள் ஊடக சந்திப்புகளில் வெளிப்படையாக பேசினாலும் அமைச்சரவைக் கூட்டங்களின்போது மௌனமாக இருக்கின்றன எனவும் அஜித் பி. பெரேரா குற்றம் சாட்டினார்.

# தனிமைப்படுத்தல் சட்டம் மீறல்; மேலும் 29 பேர் கைதாகினர்

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 29 பேர் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியை பேணாமை ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு அமைய இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் இதுவரை 81 ஆயிரத்து 353 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் நாடு பூராகவும் முன்னெடுக்கப்படும் என பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

# ரஞ்சனின் சர்ச்சைக்குரிய தொலைபேசி குரல் பதிவு

## நீதிபதிக்கு எதிரான விசாரணைக்கு தடை

முன்னாள் அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவின் சர்ச்சைக்குரிய தொலைபேசி குரல் பதிவு விவகாரத்தில், மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலபிட்டியவுக்கு எதிரான வழக்கை விசாரிக்க மேன் முறையீட்டு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

ஒரு நீதிமன்றம் தன் அதிகாரத்தை மீறி செயற்படாதவாறு பிறப்பிக்கப்படும் தடை நீதிப் பேராணையையும் மேன் முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

மேலும் குறித்த வழக்கில் 2 ஆவது சந்தேக நபராக நீதிபதி கிஹான் பிலபிட்டியவை பெயரிட்ட சட்ட மா அதிபரின் ஆலோசனையையும் வலுவிழக்கச் செய்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

ரஞ்சன் ராமநாயக்கவுடன் சேர்ந்து பொய் சாட்சிகளை உருவாக்க சதித் திட்டம் தீட்டியதாகக் கூறப்படும் விடயம் தொடர்பாக இரண்டாவது சந்தேக நபராகத் தன்னை பெயரிட்டு இடம்பெறும் வழக்கு விசாரணைகளுக்கு தடைவிதிக்குமாறு கோரி பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ள, எம்பிலிபிட்டிய மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலபிட்டிய மேன் முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனு தாக்கல் செய்திருந்தார்.

2 ஆம் பிரதிவாதியான சட்ட மா அதிபர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரால் சஹீதா பாரியும் 3 ஆம் பிரதிவாதி பொலிஸ் மா அதிபருக்காக சட்டத்தரணி கருணாரத்னவுடன் ஜனாதிபதி சட்டத்தரணி உதித்த இகலஹேவாவும் ஆஜராகியிருந்தனர்.

இந்நிலையில் முன்னாள் அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவின் சர்ச்சைக்குரிய தொலைபேசி குரல்பதிவு விவகாரத்தில், மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலபிட்டியவுக்கு எதிராக போதுமான சாட்சிகள் எதுவும் இல்லை என பொலிஸ்மா அதிபர் மேன் முறையீட்டு நீதிமன்றுக்கு கடந்த 15 ஆம் திகதி அறிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் சார்பில் மேன் முறையீட்டு நீதிமன்றில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி உதித்த இகலஹேவா, இதனை வெளிப்படுத்தினார். இவ்வாறான பின்னணியிலேயே குறித்த வழக்கின் தீர்ப்பை மேன் முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கடந்த 2020 ஜூன் 08 ஆம் திகதி, நீதிவான் நீதிமன்ற விசாரணைகளுக்கு இடைக்காலத் தடை மேன் முறையீட்டு நீதிமன்றால் விதித்திருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

# பெரும்போகத்துக்கான முதலாவது நீர் விநியோகம் மன்னாரில் ஆரம்பம்

மன்னார் மாவட்டத்தில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான பெரும் போக பயிர்ச்செய்கைக்கான முதலாவது நீர் விநியோகம் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 10.30 மணியளவில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பெரும் போகத்துக்காக 31 ஆயிரத்து 339 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட உள்ள நிலையிலே முதலாவது நீர் விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வட மாகாணத்தில் 2 ஆவது பெரிய குளமான முருங்கன் கட்டுக்கரை குளம் 11 ஆம் கட்டை துருசு பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் சர்வமதத்தலைவர்களின் ஆசியுடன் நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதன் போது மன்னார் மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் என். யோகராஜா, முருங்கன் கட்டுக்கரை குளம் நீர்ப்பாசன பொறியியலாளர் பி. அருள்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

தற்போது கட்டுக்கரை குளத்தில் 9 அடி நீர் காணப்படுகிறது. மேலும் கட்டுக்கரை குளத்துக்கு நீர்வரத்து காணப்படுகின்றது.

இந்த நிலையில் கடந்த 14 ஆம் திகதி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய முதலாவது நீர் விநியோகம் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

# மைத்திரியுடன் மீண்டும் மேடையேறத் தயாரில்லை

## பீல்ட் மார்ஷல் பொன்சேகா காட்டம்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து செயற்பட நாம் தயாரில்லை.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறிய தாவது:-

ஐக்கிய மக்கள் சக்திக்குள் கடும் மோதல் எதுவும் இல்லை என்ற போதிலும் அத்தகையதோர் நிலைமையைத் தோற்றுவிப்பதற்குச் சிலர் முற்படுகின்றனர்.

நேற்று அரசுக்குள்தான் உச்சக்கட்ட மோதல் ஏற்பட்டுள்ளது. பங்காளிக் கட்சிகள் வெவ்வேறான வழிகளில் பயணிக்கின்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் எம்முடன் இணையலாம். அவர்களுடன் பயணிப்போம்.

ஆனால், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் எவ்வித கொடுக்கல் - வாங்கல்களும் கிடையாது. அவருடன் மீண்டும் மேடையேறுவதற்கு நான் தயாரில்லை - என்றார்.

# நாடாளுமன்றில் ரஞ்சன் இல்லாதது பெரும் குறை

## அவரைச் சந்தித்த பின் சஜித் கவலை



ரஞ்சன் ராமநாயக்க தற்போது நாடாளுமன்றத்தில் இல்லாதது பாரிய குறைபாடகும். எந்த வொரு சந்தர்ப்பத்திலும் இலஞ்ச, ஊழல்களுக்கு எதிராகக் குரல் கொடுத்து வந்த ரஞ்சன் ராமநாயக்க விரைவில் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் தண்டனை அனுபவித்துவரும் ரஞ்சன் ராமநாயக்கவை நலம் விசாரிப்பதற்காக அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சென்றிருந்தார்.

வெளியே வந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக நிதி மோசடி, இலஞ்ச - ஊழல் குற்றச்சாட்டுகள், மக்களின் சொத்துக்களை சூறையாடிய குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டதில்லை. அவர் தன்னிடமுள்ள சொத்துகளைக் கூட பொதுமக்களுக்காக அர்ப்பணிப்பு செய்யக்கூடிய மனிதாபிமான மிக்கவர்.

மக்களின் நலனுக்காகச் செயலாற்றும் நற்பண்பு ரஞ்சன் ராமநாயக்கவுக்கு இருக்கின்றது. அவர் பிரச்சினைக்குரிய சூழ்நிலைகள் உருவான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சிறிதளவுகூட சிந்திக்காமல் மக்களுக்காக முன்வந்தவர் - என்றார்.

# கொரோனாத் தொற்றுப் பரவலால் செட்டிகுளம் பிரதேச செயலக திட்டமிடல் கிளைக்குப் பூட்டு!

(வவுனியா நிருபர்)

வவுனியா, செட்டிகுளம் பிர தேச செயலகத்தின் திட்டமிடல் கிளை கொரோனா அச்சுறுத்தல் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள் தென்பட்டதையடுத்து அவர்கள் மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையிலேயே அவர்களுக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து அவர்கள் சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ளமையுடன், செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் கிளை மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

# 23 இந்திய மீனவர்களுக்கும் தொற்று இல்லை என் உறுதி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஒக்.27

யாழ்ப்பாணம் பருத்தித்துறை கடற்பரப்பில் ஒக்டோபர் மாதம் 13ஆம் திகதி கைது செய்யப்பட்ட 23 மீனவர்களிற்கும் மேற்கொண்ட பி.சி.ஆர் பரிசோதனையில் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று இல்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பருத்தித்துறைக் கடற்பரப்பிற்குள் ஊடுருவிய சமயம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்ற உத்தரவின் பெயரில் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கவும் இந்த விளக்க மறியல் காலத்தை தனிமைப்படுத்தலில் வைத்து பி.சி.ஆர. பரிசோதனை மேற்கொண்டு அந்த அறிக்கையை மன்றுக்கு சமர்ப்பிக்குமாறும் வழக்கை 28ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தும் நீதவான் பி.கிருசாந்தன் உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவின் பெயரில் மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் பணிமனை மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 23 பேரில் எவருக்கும் கொரோனா தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

# முள்ளிப் பாலத்தில் மோதுண்டு சாவு

(ந.லோகதயாளன்)

வடமராட்சி முள்ளிப் பாலத்தடியில் நேற்று இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நெல்லியடியைச் சேர்ந்த பொன்னுத்துரை காண்டீபன் என்னும் 40 வயது டையவரே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

புலோலி - கொடிகாமம் வீதி ஊடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளையில் மோதுண்ட நிலையிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.



# இலங்கை - இந்திய கடற்படைத்தளபதிகள் நேரில்சந்தித்துப்பேச்சு

இந்தியக் கடற்படையின் தென் பிராந்திய கட்டளைத் தளபதிக்கும், இலங்கையின் கடற்படைத் தளபதிக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இரு தரப்புப் பயிற்சிகளின் நிமித்தம், இந்திய கடற்படையின் ஆறு கப்பல்கள் இலங்கைக்கு வந்துள்ளன.

இந்தநிலையில், குறித்த பயிற்சிகளைப் பார்வையிடும் முகமாக அந்த நாட்டின் தென் பிராந்திய கட்டளைத் தளபதி அனில்குமார் சௌலா இலங்கைக்கு வந்துள்ளார்.

அவர் இலங்கையின் கடற்படைத் தளபதியை நேற்றுமுன்தினம் சந்தித்தபோது இரண்டு நாட்டு கடற்படைகளின் ஒத்துழைப்பு குறித்து பேசப்பட்டதாக இலங்கையின் கடற்படை தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில்தங்கியிருக்கும் காலத்தில் சௌலா, இலங்கையின் வெளியுறவுச் செயலாளர், வான்படைத் தளபதி ஆகியோரையும் சந்திக்கவுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் வியாழக் கிழமை இலங்கையில் இருந்து புறப்படும் முன்னர் திருகோணமலைக்கும் அவர் செல்லவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

## அரசை வீட்டுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வகிக்கும் பிரதிநிதிகளே கூறத் தொடங்கியுள்ளனர்.

அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் ஊடகங்களில் வெளியாகியிருந்ததை நாம் அவதானித்தோம்.

அதுமட்டுமன்றி ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும் 11 கூட்டணி கட்சிகளும் அரசின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றன.

விசேடமாக அரசில் அங்கம் வகிக்கும் சுசில் பிரேமஜயந்த கடுமையான விமர்சனம் ஒன்றை அரசுக்கு எதிராக முன்வைத்தார். இந்த அரசு தோல்வியடைந்து விட்டது என அவர் கூறினார்.

அரசு எடுத்த அனைத்துத் தீர்மானங்களும் தோல்வியடைந்துவிட்டன என்று அவர் கடுமையான விமர்சனத்தை முன்வைத்தார்.

அரசின் தீர்மானங்கள் தோல்வியடைந்துள்ளதை, அரசில் அங்கம் வகிப்பவர்களே புரிந்துகொள்ளத் தொடங்கிவிட்டனர்.

நாடு மிகவும் மோசமான நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது. மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அரசில் அங்கம் வகிப்பவர்கள் பாரிய இடர்களை எதிர் கொண்டுள்ளமை தெளிவாகியுள்ளது.

இந்த அரசை உடனடியாக வீட்டுக்கு அனுப்ப வேண்டும். இல்லையேல் நாட்டுக்குத்தான் பேரழிவு - என்றார்.

## பிரான்ஸ் தூதருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், இரா.சாணக்கியன் ஆகியோர் கொழும்பில் உள்ள பிரான்ஸ்தூதுவரின் இல்லத்தில் அவரைச் சந்தித்து தற்போதைய அரசியல் கள நிலைமைகள் பற்றி கலந்துரையாடினர்.

ஐரோப்பிய யூனியனில் முக்கிய பங்காற்றும் பிரான்ஸின் தூதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் நீண்ட நாள்களின் பின்னர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622

காலைக்கதிர் Kalaikkathir

# மரண அறிவித்தல்



## பொன்னம்பலம் வேலாயுதபிள்ளை

காரைநகர், வலந்தலை, பண்டித்தாழ்வைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும், தற்போது பருத்தித்துறை வீதி, வீரமாகாளி அம்மன் கோவிலடியில் தற்காலிகமாக வசித்தவருமான பொன்னம்பலம் வேலாயுதபிள்ளை (26.10.2021) நேற்று செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் – அன்னம்மாவின் அன்புச் புதல்வனும், காலஞ்சென்ற எஸ்.ஆர்.பொன்னம்பலம் – வள்ளியம்மையின் அன்பு மருமகனும், இந்திராதேவியின் அன்புக் கணவரும், நவநீதகிருஷ்ணனின் அன்புச் சகோதரனும், செல்வராசா (நீர்பாசனத் திணைக்களம் – ரம்பாவ, அநுராதபுரம்), காலஞ்சென்றவர்களான கிருஷ்ணரூபன், தேவரஞ்சினி மற்றும் ஜெயரூபன் (S.V.முருகேஷ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அழகீசனின் பெரியப்பாவும், சிவமதி, திருவருட்பிரியா (சமூக சேவைகள் திணைக்களம் – கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நிலாவரசி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), நிலாமதி, தக்சனா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற இராமச்சந்திரன், இராஜேஸ்வரன், இராசமலர் மற்றும் இராசரத்தினம் (P.R), உமாதேவியின் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று புதன்கிழமை பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:-குடும்பத்தினர்**
**0767978529, 0779499835**